# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி...!

முதல் பக்கத் தொடர்ச்சி!

மாற்றப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களில் இருந்து கூடுதல் மின்சாரத்துறை ஊழியர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். எனவே, பொதுமக்கள் பாதிப்படையாத வண்ணம் அனைத்து நடவடிக்கைகளும் அரசு தரப்பில் அலுவலர்கள், மாநகராட்சிப் பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் 356 நீரேற்று நிலையங்களும் ஜெனரேட்டர்கள் மூலம் இயங்கும் வகையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஜெட்ராடிங், தூர்வாரும் இயந்திரங்கள், சூப்பர் சக்கர் உள்ளிட்ட 373 இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பணிகளில் கூடுதலாக 83 கழிவுநீரகற்றும் வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த மழைநேரத்தில் தமிழ்நாடு அரசு தருகின்ற வழிகாட்டுதல்களையும் முறையாகப் பின்பற்றி, பொதுமக்களும் அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும், ஊடகவியலாளர்கள் பத்திரிகையாளர்கள், மக்களுக்கு பொறுப்புடன் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் செய்திகளை வெளியிட வேண்டும். நாம் அனைவரும் கரம் கோர்த்து,

இந்த மழைக்காலத்தில் நம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம். நன்றி வணக்கம்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.

# மகாராஷ்டிராவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு -ராகுல் குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, அக். 14 -**

**மும்பையில் முன்னாள் அமைச்சர் பாபா சித்திக் கொலைக்கு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார். மகாராஷ்டிரத்தில் சட்டம்ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டி உள்ளார்.**



மும்பையில் அஜித்பவார் பிரிவு தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பாபா சித்திக்கை அடையாளம் தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் துப்பாக்கி யால் சுட்டுக் கொன்றனர்.

நிர்மல் நகர் பகுதியில் தனது மகனும், பாந்தரா கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. வுமான ஜீஷான் வீட்டிற்கு வெளியே வந்தபோது அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் அவரை நோக்கி மூன்று முறை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு தப்பினர் என்று போலீஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில்,

பாபா சித்திக்கின் மோசமான மரணம் அதிர்ச்சியையும், வருத்தத்தையும் அளிப்பதாகவும், இந்தக் கடினமான நேரத்தில் தனது எண்ணங்கள் முழுமையாக அவரது குடும்பத்தைப் பற்றியே உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிராவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்பதை இந்தப் பயங்கர சம்பவம் எடுத்துக்காட்டுகிறது என்றும், இந்தப் சம்பவத்திற்கு அரசு முழு பொறுப்பேற்க வேண்டும், நீதி வெல்ல வேண்டும் என்றும் ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; இந்தியாவில் ரயில் விபத்துகள் தொடர்கதையாகி வருகிறதே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், கடந்த அய்ந்து ஆண்டுகளில் 200 பெரும் ரயில் விபத்துகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரிகிறது.**

**கடந்த ஆண்டில் 20 ரயில் விபத்துகள்; அவ்வளவு ஏன், இப்போது 2024-ல் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்த முதல் 100 நாட்களில் மட்டும் 38 ரயில் விபத்துகள்.**

**அதனால்தான், ஆண்டாண்டுக் காலமாக இருந்த 'ரயில்வே பட்ஜட்' என்பதையே ஒழித்துக் கட்டி விட்டார்களோ ?**

**பா.ஜ.க. ஆட்சியே, ஜனநாயகத்தில் நேர்ந்த விபத்துதானே !**

## தி.மு.க. இளைஞரணி சார்பில் திண்டிவனத்தில் மண்டல அளவில்

# 'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

## அமைச்சர் க.பொன்முடி தொடங்கி வைத்தார்! கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்!

*திண்டிவனம் அக்.14-*

திமுக இளைஞர் அணி சார்பில் "என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு மண்டல அளவிலான பேச்சு போட்டியை" திண்டிவனத்தில் கழக துணை பொதுச்செயலாளர் வனத்துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி அவர்கள் வாழ்த்துரை வழங்கி துவக்கி வைத்தார்.

நடுவர்களாக பேராசிரியர் சுப வீரபாண்டியன் , மருத்துவர் சபி சுலைமான், தமிழ் காமராசன் கலந்து கொண்டனர்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் கண்ணன் ஆனந்த், செ. தினகரன், தாக பிள்ளை, சம்பத் எம்.எல்.ஏ, கார்த்தி, கணேஷ் குமார் துணை அமைப்பாளர்கள் டி.கே.பி ரமேஷ், பாபு , உதயகுமார், அண்ணாமலை, விஜயகுமார் , T.D.J. ராஜவேலு, பாலாஜி, ஏ.சி கே பிரேம் கலைவாணன், தேவேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி.மஸ்தான் எம்.எல்.ஏ. மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பா.சேகர், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, முன்னாள் ஒருங்கிணைந்த மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் அசோகன்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம்,

துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், உயர் நீதிமன்ற வழக்கறிஞர் முனைவர் சிட்டிபாபு, செயற்குழு உறுப்பினர் சீனிராஜ்,

பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், நகரச் செயலாளர் கண்ணன், முன்னாள் நகரச் செயலாளர் என்.கபிலன், நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், வழக்கறிஞர் இமயவரம்பன், ஒன்றியச் சொக்கலிங்கம், மணிமாறன் அண்ணாதுரை, இளம் வழுதி கவுன்சிலர்கள் நந்தகுமார், சின்னா ராஜேந்திரன், இளங்கோவன் , சாரங்கபாணி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# அஞ்சலகத்தில் செயல்படும் செல்வமகள் சேமிப்பு திட்டம்!

## தமிழ்நாடு 8வது ஆண்டாக முதலிடம்!

*சென்னை, அக்.14-*

பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்பு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதில் தமிழ்நாடு வட்ட அஞ்சல்துறை தொடர்ந்து 8வது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.

சர்வதேச அஞ்சல் சங்கம் கடந்த 1874ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதைக் குறிக்கும் வகையில், ஆண்டுதோறும் அக்டோபர் 7ம் தேதி முதல் 11ம் தேதி வரை தேசிய அஞ்சல் வாரம் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, தமிழ்நாடு வட்ட அஞ்சல் துறை சார்பில், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்கள் குறித்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அஞ்சல் நிலையங்களில் ஆதார் பதிவு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக ஆயிரத்து 457 கவுன்ட்டர்கள் திறக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி மற்றும் சர்வதேச அஞ்சல் சேவைகளுக்காக 66 அஞ்சல் நிலையங்களிலும், பாஸ்போர்ட் விண்ணப்பிப்பதற்காக 30 அஞ்சலகங்களிலும் கவுன்ட்டர்கள் திறக்கப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கியுடன் இணைந்து தமிழ்நாடு முழுவதும் 51.5 லட்சம் குழந்தைகளுக்கு சேமிப்புக் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்பு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதில் தமிழ்நாடு வட்டம் தொடர்ந்து 8வது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.

## திருவுருவப் படத்திற்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மலரஞ்சலி!- தென்சென்னை

# மாவட்ட முன்னாள் அவைத்தலைவர் சு. ஜம்புலிங்கம் 20 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் வேண்டுகோள்!

*சென்னை, அக்.14-*

தென்சென்னை மாவட்ட முன்னாள் அவைத்தலைவர் ஜம்புலிங்கம் அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி (17102024 வியாழக்கிழமை) அன்று நடைபெறுகிறது. இதில் கழகத்தினர் பங்கேற்றிடுமாறு கலைஞர் நகர் தெற்குப்பகுதிக் கழக செயலாளர் கே. கண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை பின்வருமாறு:



கலைஞர் நகர் பகுதியில் கழகம் வளர்த்தவரும், தென் சென்னை மாவட்ட முன்னாள் அவைத்தலைவரும், மாவட்ட துணைச் செயலாளராகவும், கலைஞர் நகர் பகுதி உருவானபோது முதல் பகுதிக் கழகப் பொருப்பாளராகவும், பகுதிக்கழகச் செயலாளராகவும், சென்னை மாநகராட்சி 131வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினராக, இருமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதியில் வாழும் மக்களுக்கு சிறப்பாகப் பணியாற்றியவரும் அனைத்துத் தரப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவருமான (நினைவில் வாழும்) சு. ஜம்புலிங்கம் அவர்களின் 20ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி (1710 2024 வியாழக்கிழமை) நடைபெறுகிறது.

நாளை காலை சரியாக 8.00 மணியளவில் சு.ஜம்புலிங்கம் அவர்களின் இல்லத்தில் அலங்கரிக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணி யன் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

மேலும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், கழக வர்த்தக அணிச்செயலாளர் காசிமுத்து மாணிக்கம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி செயலாளர் மு. ராசா, பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ். முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் பா.வாசுகி பாண்டியன் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்று அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.

அதைத் தொடர்ந்து அவரது இல்லத்திலிருநது சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா. சுப்பிரமணியன் தலைமையில் நினைவு நாள் ஊர்வலமாகப் புறப்பட்டு ஜாபர்கான்பேட்டை சத்தியா நகரில் அமைந்துள்ள இடுகாட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் கழகத் தோழர்களோடு சென்று அஞ்சலி செலுத்த உள்ளனர்.

மதியம் 12.00 மணியளவில் சு.ஜம்புலிங்கம் இல்லத்தில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா மதிய உணவு வழங்கும் நிகழ்வைத் துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்வில் தலைமை நிலைய நிர்வாகிகள், மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட பகுதி அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தேசியவாத காங்கிரஸ் (அஜித்பவார் பிரிவு) தலைவர்

# பாபா சித்திக் படுகொலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, அக்.14-**

**தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார் பிரிவு) தலைவர் பாபா சித்திக் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார் பிரிவு) தலைவர் பாபா சித்திக் அவர்கள் படுகொலை செய்யப் பட்டதை அறிந்து மிகுந்த அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளானேன். குடிமைச் சமூகத்தில் இது போன்ற வன்முறைச் செயல்களுக்கு இடமில்லை. இவை கடும் கண்டனத்துக்குரியவை ஆகும்.

பாபா சித்திக் அவர்களின் குடும்பத்தாருக்கும் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தி.மு.க. இளைஞரணி சார்பில் மண்டல அளவில் திண்டிவனத்தில் நடைபெற்ற 'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டுபேச்சு போட்டியை கழக துணை பொது செயலாளர் – வனத்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம்உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

# புரட்சி வணக்கம்!

முரசொலிக்குமட்டுமல்ல
முத்தமிழ் நாட்டிற்கே
அருந்தமிழ்ச் செல்வம்நீ
ஆற்றல் மறவன்நீ.

சிரித்த முகத்தோடு
சிந்தனைத் திறத்தோடு
வரித்த கொள்கைக்கே
வாழ்வளித்த செல்வம்நீ.

உன்னால் உயர்ந்தோரில்
ஒருசாட்சி நானும்தான்.
என்னைத் தேற்றவும்நீ
எழுந்தால்தான் உண்டு.

தகவல் களஞ்சியமே
தமிழின் விளைநிலமே
பகலைப்பறிகொடுத்துப்
பார்வை இழந்தோமே.



எதிர்பாரா செய்தியாய்
இறப்பை எமக்களித்த
புதுயுகப் போர்வாளே
புரட்சி வணக்கங்கள்.

கவிஞர்.
**பொன்.செல்வகணபதி.**